மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# பொருநராற்றுப்படை அமைப்பும் புலவனின் நோக்கும்

முனைவர் சு.சீனிவாசன்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

சங்க இலக்கிய பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று பொருநராற்றுப்படை. இந்நூலினை முடத்தாமக்கண்ணியார் 248 அடிகள் கொண்டு இயற்றியுள்ளார். இந்நூல் சோழன் கரிகால் பெருவளத்தானிடம் பரிசில், பெற்றுத் திரும்பவும் பொருநன் பரிசில் பெறாத பொருநனை அவ்வள்ளலிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**பொருநர்**

பொருநர் என்பார் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் என பலவகையினர். இங்குக் குறிக்கப்படும் பொருநன் போர்க்களம் பாடுவோனாவான். "பொருநராவார் நாடகத்தில் வேடம் பூண்டு ஆடுபவர் போல வேறொருவர்போலக் கோலம் பூண்டு வருபவராம்"[1] என்று தெ.பொ.மீ. கூறுகிறார்.

"பொருநர் என்பவர் ஏர்க்களம் அல்லது போர்க்களம் சென்று பாடும் கூத்தர். அவர் நடிப்பிலும் வல்லவர். விறலி என்பவள் உள்ளக்குறிப்பைப் புறத்தே வெளிப்படும்படி விறல்பட (திறமையாக) நடிப்பவள்"[2] என்று இராசமாணிக்கனார் கூறுகிறார்.

**பொருநராற்றுப்படையின் அமைப்பு**

இலக்கியப்படைப்பின் நோக்கமே ஏதேனும் ஒரு செய்தியை வெளிப்படுத்துதலே ஆகும். அச்செய்தி அடிப்படையின் மையக்கருத்து என்று கூறினால் மிகவும் பொருந்தும். இவ்வகையில் ஆற்றுப்படைப் பாடல்களின் மையக்கருத்து 'ஆற்றுப்படுத்துதல்' என்ற பண்பின் மூலமே வலியுறுத்தப்படுகிறது.

இவ்விலக்கியப்படைப்பு பல்வேறு உத்திகளையும் தாங்கி நிற்கும் அடிப்படையான கூறுகளின் தொகுப்பு ஆகும். "மனித உடலின் எழில் தோற்றங்களுக்குக் காரணமான வண்ணம் போன்றவை ஒரு மனிதனின் வடிவ அமைப்பினைத் தீர்மானிக்கின்றன. எனினும் இவற்றைத் தாங்கி நிற்பது எலும்புக் கூட்டின் அமைப்பாகும்"[3] என்று ம. திருமலை கூறுகிறார். இவ்வகையில் பொருநராற்றுப்படையின் அமைப்பினைப் பின்வரும் எட்டுக் கருத்தலகுகளாக அமைத்துக் கொள்ளலாம்.

1. பொருநன் வறுமை நிலையைச் சுட்டி விளித்தல்.
2. பாலையாழினை இசைத்துப் பாடிணியும் அவன் குழாமும் வருதல்.
3. ஆற்றுப்படுத்தும் பொருநன் சிறப்பித்து விளித்து ஆற்றுப்படுத்துதல்.
4. ஆற்றுப்படுத்தும் பொருநன் பரிசில் பெற்று வந்தமை.
5. கரிகாற்சோழனின் சிறப்பினைக் கூறுதல் + அவனை அணுக வேண்டிய முறைமையைப் பரிசில் பெறாத பொருநனுக்குச் சுட்டல்.
6. மன்னனின் உடனடி பரிசில் நடைமுறைகளை விளக்குதல்.
7. அஃறிணையின் ஒத்த அன்பினையும். மக்களின் ஒற்றுமை கலந்த வாழ்வியலையும் திணைமயக்கத்தின் மூலம் கூறல்.
8. கரிகாலன் நாட்டுவளம் கூறிப் பரிசில் தருபவன் யார் (கரிகாலன்) எனல்.

மேற்கூறியவற்றைப் பொருநராற்றுப்படையின் சட்டகமாகக் கொள்ளலாம், ஏனெனில் எட்டு மையக்கருத்துகளும் புலவர் சொல்ல வருவன, இவற்றுள் எந்த ஒன்று நீக்கப்பட்டாலும் முடத்தாமக் கண்ணியாரின் கருத்துகள் முழுமையாகப் பெறப்படா. எட்டு மையக்கருத்துகளை விளக்கிச் சொல்ல புலவர் பயன்படுத்தும் விரிவாக்கக் கூறுகளான நிகழ்ச்சிகள் 'வருணனைகள்'. 'அடைமொழிகள்', 'உவமைகள்'. என்பன முக்கியமானவை. இவ்விளக்கப்பகுதிகள் கதைப்பகுதியாக அமைந்து இவ்வாற்றுப்படை இலக்கியத்திற்கு மெருகூட்டுவதுடன் இலக்கியத்தை உருவாக்கியும் தருகின்றன.

**பொருநராற்றுப்படையில் புலவனின் நோக்கம்**

பொதுவாக ஆற்றுப்படை என்பது "உயர்ந்த மக்களைப் பாடும் பாடாண் திணையைச் சார்ந்தது, ஆற்றுப்படையின் நோக்கமே கொடையில் சிறந்த ஆண்மகனைப் பாடுவது"[4] என்று தெ. பொ.மீ. கூறுகிறார். இவ்வகையில் இவ்வாற்றுப்படை இரண்டு நோக்கங்களைக் கொண்டுள்ளது.

1. பொருநனின் வறுமையைத் தீர்த்தல்.
2. நாட்டுவளத்தின் தோற்றம் கூறி மன்னனை முதன்மைப்படுத்துதல்.

**பொருநனின் வறுமையைத் தீர்த்தல்**

"ஆற்றுப்படைப் பாடல்கள் குறிப்பிட்ட சமுதாய காலக்கட்டத்தின் படைப்புகளாகக் கரிகாற்பெருவளத்தான் காலந்தொட்டு மூவேந்தரின் ஆட்சிகளின் அழிவைப் பாடும் சிறுபாணாற்றுப்படைக் காலம் வரையில் தொடர்ந்து படைக்கப்பட்டுள்ளன. கலைத்தொழில் காரணமாக அரசரிடம் பொருள் பெற்று வாழும் பாணர் கூத்தர் போன்ற கலைஞர்கள் இப்பாடல்களின் தோற்றுவாய்க்குக் காரணமானவர்களாக உள்ளனர், வறுமையில் வாடும் பாணர், கூத்தர், பொருநர் விறலி போன்றோர் அரசரிடமிருந்து பொருளையும் உணவையும் பெற்றுள்ளனர். இவர்களை அரசர்களிடம் வழிப்படுத்தியவர்கள் யார் என்பதும் எங்கும் குறிப்பிடப் பெறவில்லை"[5] என்று மாதையன் கூறுகிறார். மேலும் "தனியொரு மனிதன் வறுமையில் வாடுவதைவிட ஒரு பெரிய குடும்பமே அதிலும் கலைவல்ல குடும்பமே வாடுவது கொடிய காட்சியல்லவா? இந்தக் குடும்பத்தில் ஆடல் வல்ல பாடல்வல்ல பெண்கள் வாடுவது காணுதற்குரிய

கொடுமை, அதிலும் அவர்கள் அழகுடையவாகளாக இருப்பது இந்தக் கொடுமையை மிகுதிப்படுத்துகிறது என்று தெ.பொ.மீ கூறுகிறார்.

பொருநர்களுக்கு வறுமை ஏற்பட காரணம் என்ன? மன்னர்களின் நாட்டு வளத்தில் ஐந்திணை வளமும் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளது. இச்சூழலில் இவர்களுக்கு மட்டும் வறுமை என்னும் பிணி எப்படி ஆட்டுவித்தது? இல்லை இவர்கள் உழைக்கும் சோம்பேறிகளா? என்ற வினாவிற்குக் கீழ்வருவன காரணமாக இருக்கலாம் என்று கருத இடம் உண்டு. அவை:

1. தான் வறுமையில் வாடினாலும் கற்ற கலை அழிவுறக்கூடாது என்ற எண்ணம்.
2. பலகாலம் வறுமையைத் தீர்க்கும் பொருள்களையும். பொன், தேர் முதலியவற்றையும் தன் சுற்றத்தார்க்குப் பகிர்ந்து கொடுக்கும் சுயநலமில்லாத உயர்ந்த எண்ணம்.
3. தான் கற்ற கலையை மக்கள் மற்றும் மன்னர்களிடையே காட்ட விரும்பும் எண்ணம்.
4. தான் பெற்ற பொருளையும் நீயும் பெறுக எனப் பொருள் தரும் மன்னனிடம் ஆற்றுப்படுத்தும் தன்மை பொருள் தரும் அம்மன்னனைவிட சிறந்த மேம்பட்ட எண்ணம்.

பொருநர்களின் வறுமை பற்றியச் செய்திகள் இவ்வாற்றுப்படையில் அதிகமாகக் காணப்படுகின்றன. ஏனெனில் நூலின் தொடக்கத்தில் ஆற்றுப்படுத்தி பேசப்பட்ட வறுமை, மன்னன் பரிசில் தரும் வரை பேசப்படுகிறது. 1 முதல் 177 அடிகள் வரை வறுமை பறறிய செய்திகள் பரவிக்கிடக்கின்றன. இவற்றில் வறுமையினை இருவகையாகப் பிரித்துக் கொள்ளலாம். அவை:

1. ஆற்றுப்படுத்தும் பொருநனின் வறுமை
2. ஆற்றுப்படுத்தப்படும் பொருநனின் வறுமை

**ஆற்றுப்படுத்தும் பொருநனின் வறுமை**

ஆற்றுப்படுத்தும் பொருநனின் வறுமை இந்நூலில் 64 அடி முதல் 149 அடிகள் வரை பேசப்படுகின்றது. இப்பொருநன் தான் வறுமையுற்றிலிருந்த நிலையினையும், மன்னனிடம் எவ்வாறு பரிசில் வாங்கியமைக் குறித்த நிலையினையும் தன் அனுபவமாகக் கூறுகிறான். மற்ற ஆற்றுப்படைகளில் இச்செய்தி இல்லாதது இந்நூலின் சிறப்புக்குரியது செய்திகளாகக் கொள்ளலாம்.

**வறுமையை நினைத்துப் பறவையைப்போலப் புலம் பெயர்தல்**

பொருநன் தன்னுடைய வறுமையை நினைத்துப் பழுமரம் தேடும் பறவை போல, வறுமை தீர்தல் காரணமாக அரண்மனை வாயிலுக்குள் வாயிலோனுக்கு அறிவிக்காமல் நுழைந்து, முன்னர் வறுமையால் இளைத்த அவனுடல் மகிழ்ச்சியாலே ஒரு பாட்டைப் பொருநன் பாடுவதாக (64–65) வறுமைச் சூழல் அமைகிறது. இதனால் வறுமையுற்றிருந்த எதிர்ப்பட்ட பொருநனுக்குத் தானும் வாழலாம் என்ற நம்பிக்கை ஊட்டுவதாக அமைகிறது.

**மண்ணைக் காணும் முன் வறுமை**

பொருநன் வள்ளலைக் காணும் முன் மாலைக் காலத்தே அவனிடத்தில் நிலைகொண்ட சொல்லிற் கெட்டாத வறுமை, அவ்வள்ளலைக் கண்ட மறுதினத்தில் மற்றோர் வியக்கும்படி வண்டுகள் மொய்க்கும் புதிய நிலையும், இது கனவோ என என்னும் பொருநனின் எண்ணத்தின் மூலம் (96–102) பொருநன் கொண்டிருந்த வறுமை நிலையைப் போக்கிய நிலையினை இச்செய்தி காட்டுகிறது.

**வழிநடை வருத்தம் போகுதல்**

ஏவல் மகளிர் பொன்னால் செய்த வட்டில் நிறையும் கள்ளினைத் தருவதால் தான் வறுமையினால் வழிநடை வருத்தத்தில் வந்த களைப்பு அக்கள்ளினை உண்டதால் மனவருத்தம் நீங்க மகிழ்ச்சியுடன் இருந்தேன் (86–89) என்று ஆற்றுப்படுத்தும் பொருநன் குறிக்குமிடத்து வறுமையினால் ஏற்பட்ட வருத்தம் நீங்கிய வறுமைச் செய்தி புலப்படுகிறது.

**வருத்தம் நீங்கி துயிலும் பொருநன்**

தவம் செய்வோர் அத்தவத்தின் பயனைப் பெற்றாற் போன்று பொருநன் வழிநடை வருத்தத்தின்போது கள்ளினை உண்டு அக்கள்ளின் களிப்பாலே உண்டாகும் மெய்நடுக்கமேயன்றி நடுக்கத்திற்கு காரணமான மனக்கவலை சிறிதுமின்றி கரிகாலனின் அரண்மனையின் ஒரு புறத்தே துயில்கொண்டு பின்னர் எழுந்தேன் (89–95) என்று ஆற்றுப்படுத்தும் பாணன் தனது வறுமை வருத்தம் நீங்கிய நிலையினை உணர்த்துகின்றான். இச்செய்தி மூலம் பொருநன், உணவின்றி உடல் நடுக்கம் ஏற்படும் அளவிற்கு வறுமையில் வாடிய நிலையினைக் காண முடிகிறது.

**வறுமையினால் பெற்ற வளம்**

பொருநன் மன்னனிடம் ஊர்திகள், ஆடைகள், அணிகலன்கள் முதலியவற்றைப் பரிசிலாகப் பெற்று இனி எக்காலமும் வறுமை என்னை அணுகாதபடி வந்தேன் (127–129) என்று கூறுவதன் மூலம் வறுமை நிலையை உணரமுடிகின்றது. இச்செய்தி வறுமையினால் வந்த பொருநர்களுக்கு மன்னன் பரிசில்கள் பல தந்து வறுமையைப் போக்கிய நிலையினைச் சுட்டுகிறது.

**பசி நீங்கியமையால் ஆடும் மகளிர்**

பொருநரும், விறலியும் மன்னனது அரண்மனையில் தங்கி இறைச்சி உணவுகளை உண்டபின், சிறிய யாழையுடைய விறலி அவ்யாழினோடு தாளத்திற்கு ஏற்பப் பாடியும் ஆடியும் நிற்பர். பல தின்பண்டங்களை உண்டும் இதனை கண்டும் கேட்டும் வறுமையால் வாடின பொருநர் சுற்றம் பல நாட்களை அரண்மனையில் கழித்தனர் (110–111) என்ற குறிப்பு மூலம் வறுமை வருத்தம் நீங்கி மகிழும் நிலையினைக் காண முடிகிறது.

**ஆற்றுப்படுத்தப்படும் பொருநனின் வறுமை**

வறுமையை நினைத்து வேறுபுலம் பெயர்தல்

ஆற்றுப்படுத்தும் பொருநன், செல்வம் நிறைந்த ஊர்களில் நிகழும் திருவிழாக் காலங்களில் தரும் சோறானது தனது வறுமையை முழுதும் போக்காது என எண்ணி

வறுமை முற்றிலும் ஒழிதலைக் கருதி அயலிடம் செல்லுதலை நினைத்து புறம் போந்த பொருநனே! (1–3) என்று விளிக்குமிடத்து இவனது வறுமை நிலையை உணர முடிகிறது. திருவிழாக்காலங்களில் பொருநர்கள் மக்களிடத்தில் தம் கலைத்திறனை வெளிப்படுத்தியுள்ள செய்தியினையும் அதனால் பொருநர்களின் வறுமை நீங்கவில்லை என்ற செய்தியினையும் காண முடிகிறது.

**வறுமைப்பாடினி**

ஆற்றுப்படுத்தப்படும் பொருநனுடன் செல்லும் பாடினியின் அழகினை ஆசிரியர் கூந்தல், நுதல், புருவம், கண், வாய், பல், காது, கழுத்து, தோள், முன்கை, விரல், நகம், அடி, ஆகிய உறுப்புகளை கேசாதிபாதமுறையில் வருணிக்கிறார். இவ்வழகு உறுப்புகளைக் கொண்டப் பாடினி சிவந்த நிலத்தில் நடத்தலால் பரல்கள் அவளை வருத்த, மரத்தின் பழம் போன்ற கொப்புளங்கள் உருவாகின்றன. இவ்வறுமை துன்பத்திலும் அழகு பெடை மயில் போல் காணப்படுகிறாள் (25–47) என்று குறிக்குமிடத்து வறுமைச் சூழல் வெளிப்படுகிறது. பொருநர்களுடன் சென்று விறலியரும் பல துன்பங்களைத் தாங்கிக்கொண்டு கலைத்திறனை வெளிப்படுத்தும் பாங்கு சிறப்புமிக்கது.

**வரிநிழல் வறுமை**

வறுமையுற்ற பொருநன், யானை உலாவரும் காட்டு வழியில் பாடினியுடன் தங்கி வருகிறான். அக்காடுகளில் உள்ள மரங்கள் வெப்பக் கொடுமையால் இலைகள் உதிர்ந்துவிடுகின்றன. ஆகையால் இலைகளின்றி இருக்கும் கிளைகளின் வரிநிழலில் தங்கி காட்டில் உறையும் தெய்வத்தை வணங்கி வருகிறான் (48–52) என்பது அவன் வறுமையினால் வந்த வழியின் இயல்பினைச் சுட்டுவதாக அமைகிறது. இச்செய்தி பொருநர்கள் தம் கலைத்திறனை வெளிப்படுத்தவும் வறுமையைப் போக்கவும் எதிர்கொண்ட துன்பத்தைப் புலப்படுத்துகின்றனது.

**வேறுவழியில் செல்லாமல் தடுத்தல்**

ஆற்றுப்படுத்தும் பொருநன் எதிர்ப்பட்டவனை நோக்கி கூத்தர்க்குத் தலைவனே வறுமையின் காரணமாக வேறு வழியில் தப்பிச் செல்லாமல் என்னைக் கண்டது உன் பிறவியில் சேய்த நற்பயனே (56–59) என்று கூறும்போது பொருநனின் வாழ்க்கை நிலையினையும், வறுமை பிணியினை உணர முடிகிறது. இது ஆற்றுப்படுத்தும் பொருநனின் சுயநலமில்லாத எண்ணத்தைக் காட்டுகிறது

**சுற்றத்தின் வறுமை**

ஆற்றுப்படுத்தும் பொருநன் அடுகின்ற பசியாலே வருந்தின தனது சுற்றத்தோடும் தொன்றுதொட்டு வந்த பசியோடும் வருகிறான். அவனைப் பசி உன்னைக் கைவிடுதல் வேண்டுமானால் காலம் தாழ்த்தாமல் புறப்படு (60–63) என்று ஆற்றுப்படுத்தும் பொருநன் கூறுமிடத்து வறுமைச்சூழல் அமைகிறது. எதிர்ப்பட்ட பொருநன் மற்றும் அவன் சுற்றத்தின் வறுமையைக் போக்க நினைக்கும் உணர்வினை இச்செய்தி காட்டுகிறது.

**கந்தை ஆடை**

மன்னனைக் காணும்போது பொருநனின் உடையானது கொட்டைப் பாசியினது வேர்போலே அழுக்கோடே குறைந்த தையலையுடையது (153–154) என்ற செய்தி

அவனின் வறுமை நிலையை உணர்த்துகிறது. ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் அடிப்படை வசதிகூட இல்லாத வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர் என்பது புலப்படுகின்றது.

**ஈட்டிய பொருளை பிறர்க்குத் தரல்**

பொருநன் தனது வறுமையால் அவ்வள்ளலிடம் பெற்ற பொருளைப் பிறர்க்கு அதாவது தனது சுற்றத்தார்க்கு வேண்டியவாறே கொடுப்பா (173–176) என்பதன் மூலம் வறுமையிலும் மேலோங்கிய அவனது எண்ணம் சிறப்புற அமைகிறது.

**நாட்டுவளத்தின் தோற்றம் கூறி மன்னனை முதன்மைப்படுத்துதல்**

மன்னன் பற்றியச் செய்திகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை: 1. மன்னனது பன்புகள் (அ) சிறப்புகள், 2. மன்னனது நாட்டுவளச் சிறப்புகள்.

**மன்னனது சிறப்புகள்**

இவ்வாற்றுப்படையில் மன்னனது கொடைப்பண்பு, வீரச்சிறப்பு, ஆட்சித்திறன், விருந்தோம்பல் பன்பு, பரிசில் சிறப்பு போன்ற செய்திகள் மற்ற ஆற்றுப்படைகளைவிட அதிகமாகப் பேசப்படுகின்றன.

கரிகாலனின் ஈகை உள்ளத்தினை இழைந்தோடச் செய்திருக்கிறார் முடத்தாமக் கண்ணியார். தொல்காப்பியர் கூறும் ஆற்றுப்படை இலக்கணத்தின்படி வறுமையை நீக்குதல் இந்நூலில் மன்னன் மூலம் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளது. இக்கருத்திற்கேற்ப நவநீதகிருஷ்ணன். "கரிகாலனின் பண்புநலன் கலைஞர்களை ஓம்புவதையே சிறப்பாகக் கொண்டிருக்கிறது. தானாகப் படையெடுக்காது பிறர் படையெடுத்து வந்த போதுமட்டும் தடுத்து நிறுத்தும் பண்பு நலன் இவனிடம் காணப்படுகிறது. தொலகாப்பியனர் கூறும் வஞ்சிப் போரின் இலக்கணத்திற்கேற்ப இவன் படையெடுப்பு அமைந்துள்ளது."[7] என்று கூறியுள்ளார். மேலும் இவனது கொடைச்சிறப்பினைப் பற்றி "மற்ற ஆற்றுப்படைகளில் எந்தேந்த நாடுகளில் எந்தெந்த மன்னர்கள் என்னென்ன பொருள்களைத் தருவார்கள் அங்கு எவ்வாறு செல்ல வேண்டும் என்பன போன்ற செய்திகள் அமைந்துள்ளன. ஆனால் பொருநராற்றுப்படையில் அத்ததையை செய்திகளை விடுத்துப் புரவலன் கொடுக்கும் கொடை மட்டுமே கூறப்படுகிறது. ஆதலின் ஆற்றுப்படை நூல்களில் பொருநராற்றுப்படை தனித்துவமானதாக இருக்கிறது என்றும் இது மற்ற ஆற்றுப்படைக்கு முந்தையது என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்"[8] என்றும் இளங்குமரனார் கூறுவதாகப் பக்தவத்சலபாரதி கூறுகிறார்.

**கலைஞர்களின் மானத்தைக் காக்கும் பண்பு**

கரிகாலன், தன்னை நாடி வரும் பொருநர்களின் கந்தையாடையைப் பார்த்தவுடன் தன் அரண்மனையில் இருப்பவர்களிலிருந்து இவர்கள் வேறுபடக்கூடாது என எண்ணி அவர்களின் மானத்தைக் காக்கும் வகையில் புத்தாடையை கொடுக்கிறான்(79–83). இச்செய்தி கரிகாலனின் மனிதநேயப் பண்பினைக் காட்டுகிறது. மேலும் இவ்விடத்தில் மன்னன் நாட்டை ஆளும் அதிகாரத்திலிருந்து விடுபட்டு காட்டுகின்றது.

**விருந்தோம்பல் பண்பு**

கலைஞர்களின் விருந்தோம்பல் பண்பு என்பது "விருந்தைப் புனைந்துரைப்பது சிறந்த பண்பாடாகாது எனினும் உணவின்றி வாழ்கின்ற அந்தக் குடும்பத்திற்கு இன்றியமையாததாகும். நீங்கள்போனால் இப்படியிப்படியெல்லாம் உண்பீர்கள் என்று விரித்துரைப்பது நாகரிகமல்ல. எனவே அந்த உணவினையும் அவர்கள் உண்ணப் போவதாகக் கூறாமல் தாமுண்ட அனுபவமாகக் கூறி இந்தப் புனைந்துரையில் வரும் விரிவுரையெல்லாம் தன்மேலே ஏற்றுக்கொண்டு கூறும் பண்பாட்டின் மூலம் இந்தப் பாட்டு நன்கு விளக்குகின்றது"[9] என்று தெ.பொ.மீ கூறுகிறார்.

1. ஆற்றுப்படுத்தும் பொருநனுக்கு விருந்தோம்பிய முறை
2. ஆற்றுப்படுத்தப்படும் பொருநனுக்கு விருந்தோம்பும் முறை

கரிகாலன் பொருநர்களுக்குச் செம்மறிக்கிடாயின் இறைச்சி, தசை, துண்டம் போன்றவற்றையும், முல்லை அரும்பின் இடைமுறியாத அரிசிச் சோற்றினையும், பொறிக்கப்பட்ட கறியினையும் கொடுத்து அவர்களின் பற்கள் தேயும்படி (102–105,112,115,117) பசியினைப் போக்கிய உயர்ந்த பண்பினைச் செய்திருக்கின்றான். மேலும் அவர்களின் அருகிலேயே நின்று ஊட்டி உண்க உண்க (156–157) என்று யாரும் விருந்தோம்பிய முறை பண்பாட்டுச் செய்தி.

**கரிகாலனின் பரிசில் பண்பு**

கலைஞர்களுக்குப் பரிசில் தராத மன்னர்களும் இருத்திருக்கின்றனர் என்பதை மலைபடுகடாம் "உயர்ந்த அரசுரிமையையும், கொடுமையில்லாத அமைச்சர் முதலியோரும், அகன்ற நாடும் பெற்றிருந்தாலும் சுருங்கிய அறிவுடையவராய், யாசிப்போருக்கு இல்லையென்பார் பலர்"[10] எனக் கூறுகிறது. அவ்வகையில் கரிகாலன் பொருநர்களுக்கு இல்லையென்று கூறாமல் அவர்களின் மனநிலை அறிந்தும், புகழ் ஒன்றே நிலையானது என அறிந்தும் பரிசில்களை நல்குகிறான். இப்பரிசில் முறையானது விருந்தோம்பல் முறை போன்றே இரு நிலைகளில் அமைகிறது.

ஆற்றுப்படுத்தும் பொருநனுக்குக் களிறு, பிடி, கன்றுகள், ஆடை, ஊர்தி, அணிகலன்கள் (125–126) போன்றவற்றை வழங்கியுள்ளான்.

ஆற்றுப்படுத்தப்படும் பொருநனுக்குப் பொன்னரி மாலை. முத்து மாலை, ஊர்களுடனே யானைகளையும், நான்கு குதிரை பூட்டிய தேரினை ஏழடி நடந்து வந்தும கொடுப்பான் (159–177) என்றும் அவன் பரிசில் நீட்டிய பண்பு சிறப்பிக்கப்படுகிறது.

**மன்னனது நாட்டுவளச் சிறப்புகள்**

ஆற்றுப்படைகளில் மன்னர்களது நாட்டுவளம் சிறப்புறப் பேசப்படுகிறது. இவர்களது நாட்டு வளம் கலைஞர்கள் மூலமாக கூறப்பட்டுள்ளது. ஏனெனில் இவர்கள் பொருள் தரும் வள்ளல்களை நாடிச் செல்ல பயணம் மேற்கொள்வர். அந்நிலையில் இவனைப்போன்ற ஒத்த கலைஞர்கள் மன்னனிடம் பொருள் பெற்றுத் திரும்பும்போது எதிர்ப்படுவர். அவர்கள் எதிர்ப்பட்ட கலைஞர் கூட்டத்துக்கு அம்மன்னனின் நாட்டிற்குப் பரிசில்கள் பெற வழிக் கூறும்போது வழி வருணனைகள், நாட்டுவளச் சிறப்புகள் விரிவாகப் பேசப்படுகின்றன.

திருமுருகாற்றுப்படையைத் தவிர மற்ற நான்கு ஆற்றுப்படை நூல்களிலும் நாட்டுவளம் பேசப்படுகிறது. இந்நான்கு நூல்களில் பொருநராற்றுப்படையைத் தவிர மற்ற மூன்று ஆற்றுப்படை நூல்களிலும் வழி வருணனைகள் குறிக்கப்படுகின்றன.

**பொருநராற்றுப்படையில் வழி கூறாமைக்குக காரணம்**

இவ்வாற்றுப்படையில் வழி கூறாமைக்குச் காரணங்கள் உள்ளன. அவை:

1. கரிகாற்சோழன் பெருவேந்தன் என்பதாலும், இவனைப் பற்றி எல்லோரும் பரவலாக அறிந்திருந்தமையாலும் நாட்டுக்கு வழி தேவையில்லை எனப் புலவர் கருதியிருக்கலாம்.
2. இந்நூலினை இயற்றிய முடத்தாமக்கண்ணியார் முடம் வாய்ந்தவர் என்பதால் அவர் வழி கூறவில்லை என்ற கருத்தும் உண்டு.
3. இந்நூல் முதலில் தோன்றிய நூல் என்பதால் வழி கூறப்படாமல் இருந்திருக்கலாம். இதனைத் தொடர்ந்து எழுந்த மற்ற ஆற்றுப்படையை புலவர்கள் இந்நூலிருந்து வேறுபடுத்த வேண்டும் என நினைத்து வழிகளைக் கூறத் தொடங்கியிருக்கலாம்.

இந்நூலில் வழிகள் கூறப்படாமையை இராசமாணிக்கனார் “புதிய பாணன் எது வழியாகச் சென்று கரிகாலனை எவ்வூரில் காண வேண்டும் என்பதை இப்பாடலிற் குறிக்கவேயில்லை என்பது கவனிக்கத்தக்கது. இவர் இப்பகுதியில் காவிரியின் நீர்வளம் சோழநாட்டு மருதநிலச்சிறப்பு, சிற்றூர்களின் வளம் ஆகியவற்றையே கூறியுள்ளார். இவ்விவரங்களை நோக்க, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணற்றுப்படை, கூத்தாற்றுப்படை ஆகிய மூன்றையும் பாடிய ஆசிரியர்களைப் போல இவர் புதிய பொருநனுக்கு முறைப்படி வழி கூறவில்லை என்பது தெளிவாகிறது. பிற ஆற்றுப்படைகள் புதிய பாணனையோ கூத்தனையோ ஆற்றுப்படுத்தும்முறையில், குறிப்பிட்ட ஒவ்வொரு வள்ளலையும் புகழ்வதற்காகவே பாடப்பட்டுள்ளது எனினும் அவற்றுள் ஒவ்வொன்றிலும் வழி செம்மையாகக் கூறப்பட்டுள்ளது”[11] என்று கூறுகிறார்.

ஏனைய ஆற்றுப்படையில் மன்னனின் நாட்டிற்குப் செல்லும் வழி குறித்த வருணையின்போது அம்மன்னனது ஊரின் சிறப்புகள், குடிமக்களின் தோற்றம், தொழில் ஐந்திணைவளம், விருந்தோம்பல் பண்பு, ஊர் அணிமைசுட்டி பரிசில் தருதல் என்பவனாக எடுத்துரைக்கிறன. ஆனால் பொருநராற்றுப்படையில் வழிகள் கூறப்படவில்லை. அதனால் திணைமயக்க உத்திமூலம் இறுதியில் நாட்டு வளத்தை முடத்தாமக்கண்ணியார் சிறப்பிக்கிறார். அவை:

- ☆ அகன்ற நிலப்பரப்பின் கண்ணே, மரச்சோலைகளிடத்தே குடி மக்களிடத்தில் மருதநில கரிய காக்கை நெய்தல்நில யாமைப் பார்ப்பைத் தின்னும்.
- ☆ முதியோர் மாறுபாடு அறமன்றம் ஏறியவுடன் அகலுதல்.
- ☆ மருதநில மகளிர் நெய்தல் நிலத்து மணலில் வண்டிழைத்து விளையாடுதல்,
- ☆ குறிஞ்சி நிலப்பறவையாகிய மயில் மருதநிலத்து காஞ்சி மரத்திலும், மருத மரத்திலும் தங்குதல்.
- ☆ நாரையானது மருதநில உழவர் ஓசை வெருவி, வேற்றிடம் சென்று அது வெறுத்தலாலே முல்லைக் காட்டில் தங்கும். அதுவும் வெறுத்ததால் கடற்கரை

மீனைத் தின்று புன்னைமரக் கிளைகளிலே தங்கும். அதுவும் வெறுத்ததால் அலை, ஆரவாரம் அஞ்சி உயரிய பனைமரத்தில் தங்கும்.

☆ குறிஞ்சி நில பறவையாகிய மயில் நெய்தல் நில வண்டினது ஓசைக்கேற்ப இடுமணலில் ஆடும்.

☆ குறிஞ்சி நிலமக்கள் தேன், கிழங்கு போன்றன விற்று நெய்தல் நில மக்களிடம் மீன் மற்றும் நெய்யினைப் பண்டமாற்றாகப் பெறுவர்.

☆ மருத நிலத்தவர் கரும்பு, அவல் விற்று அதற்கு ஈடாக மான்தசை, கள் எனக் குறிஞ்சிப் பொருளைப் பெறுவர்.

☆ குறிஞ்சிப்பண் பரதவர் பாட, நெய்தற்பூ குறவர் சூட, முல்லைநில மக்கள் மருதப் பண்ணைப் பாடுவர்.

☆ முல்லை நிலக்கோழி, மருத நெற்கதிரைத்தின்ன, மருதநில மனைக் கோழிகள் குறிஞ்சி நிலத் திணையைத் தின்ன, மலை மந்திகள் கழியிலே மூழ்க, கழியில் திரியும் நாரை மலையிலே கிடக்கின்றன. (177–225)

அஃறிணை உயிர்களாகிய பறவை, விலங்கு ஆகிய இவற்றின் மூலம் கரிகாலனது நானில நாட்டுவளத்தைக் கூறுகிறார். இத்திணைமயக்கச் செய்தியினை நோக்கும்போது அஃறிணை உயிர்கள் இந்நான்கு நிலத்திலும் மாறிமாறி ஒற்றுமையுடன் செயல்படுவதை எடுத்துரைத்து கரிகாலன் நாட்டில் வாழும் மக்களின் ஒற்றுமையையும் செங்கோல் ஆட்சியையும் குறிப்பாக எடுத்துரைத்தப் பாங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலத்தின் வருணனை பற்றி கா.சுப்ரமணியன் "ஆற்றுப்படைகளிலுள்ள வருணனைகள் இந்நிலப்பிரிவுகள் வெறும் இலக்கிய மரபு மட்டுமல்ல. புவியியல் உண்மையும்கூட என்பதனை ஐயத்திற்கு இடமின்றி நிருபிக்கின்றன. அத்துடன் இந்நிலப்பகுதிகளில் ஒவ்வொன்றிலும் நாகரிக நிலைகளில் வாழும் மக்கள் காணப்படுவதை முக்கியமாகப் பார்க்க வேண்டும்"[12] என்று கா. சிவத்தம்பி கூறுவதாக கூறுகிறார்.

ஏனைய ஆற்றுப்படையில் தலைநகர் சிறப்பு, மலைச் சிறப்பு, நகர்ச்சிறப்பு போன்றவற்றின் வளம் குறித்துக் பேசப்படுகிறது. ஆனால் பொருநராற்றுப்படையில் மட்டும் காவிரியாற்றின் வளம் சிறப்பித்துப் பேசப்படுகிறது. மற்றவை கூறப்படவில்லை. ஏனெனில் இந்நூலின் கரிகாலனது சோழ நாடு முழுவதும் வருணிக்கப்படுவதால் தலைநகர் வருணனை தனியாக அமையவில்லை. காவிரியாற்றின் வளம் நூலின் இறுதியில் 232முதல் 248 அடிகள் வரை பேசப்படுகிறது.

**முடிவுகள்**

1. பொருநராற்றுப்படையில் அடங்கும் எட்டு வகைக் கருத்தலகினை அறிய முடிகிறது.
2. வறுமைப்பற்றிய செய்திகளில் ஆற்றுப்படுத்தும் பொருநனின் வறுமை 29 அடிகளிலும் ஆற்றுப்படுத்தப்படும் பொருநனின் வறுமை 63 அடிகளிலும் அமைந்துள்ளன.
3. மன்னனின் பண்புநலன்கள், வீரம், ஆட்சி சிறப்பு போன்ற செய்திகள் 63 அடிகளிலும், அவனது குடிமக்களின் வாழ்வியல், நாட்டுவளம் பற்றியச் செய்திகள் போன்றன 73 அடிகளிலும் காணப்படுகின்றன.
4. இசைபற்றி செய்திகள் 24 அடிகளில் காணப்படுகிறது.

மேற்கண்ட முடிவுகளை நோக்கும் புலவர் மூன்று நோக்கங்கள் கொண்டு இந்நூலினை படைத்துள்ளார். அவற்றில் முதலாவது நோக்கம் கலைஞர்களின் வறுமையும், அவை நீக்குதலும், ஏனெனில் இந்நூல் முழுவதிலுமே பொருநன் வறுமை ஆங்காங்கே சுட்டிக் காட்டப்படுகிறது. மேலும் ஆற்றுப்படுத்துபவன் தான் மன்னனைக் கண்டமுறை, அவன் விருந்தோம்பல் முறை, பரிசில் முறை ஆகியன கூறி பின்பு ஆற்றுப்படுத்தப்பவனை நோக்கி நீயும் சென்றால் இன்னின்ன உணவு, பரிசில் கிடைக்கும் என மீண்டும் வலியுறுத்துவதால் இவை போக்குதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள நிலையினை அறிய முடிகிறது. பொருநன் நடந்து வரும் கொடிய காடு, விறலி கொப்புளம் உண்டாகுமாறு இவனுடன் வரும் நிலை, அரண்மனை சென்று துயிலும் நிலை, யாழ் இசைத்து பாடி தெய்வத்தை வணங்கும் முறை என இவர்களைப் பற்றிச் செய்தி பாடல் முழுவதும் இழைந்தோடுகிறது.

புலவரது இரண்டாவது நோக்கம் மன்னனை முன்னிலைப்படுத்துவது. மன்னன் பற்றியச் செய்திகள் 136 அடிகள் பெற்று அதிகமாகக் காணப்பட்டாலும் மன்னின் எண்ணம் பொருநர்களது வறுமையைப் போக்குவதே. முதல் அடிகள் முதல் 178 அடிகள் வரை மற்றும் 73 அடிகள் முதல் 177 அடிகள் வரை மன்னன் பற்றிய செய்திகளில் கரிகாலன் உணவு, உடை, பரிசில் கொடுத்து வறுமை நீக்கி நிலை காணப்படுவதால் இச்செய்திலும் வறுமையே முதன்மைப் பெறுகிறது. ஆகையால் இவை இரண்டாவது நோக்கமாகக் கொள்ளப்படுகிறது. திணை மயக்க உத்தி மூலம் மன்னனது நாட்டுவளத்தையும், அவனது குடிமக்களின் வாழ்வியல் செய்திகளையும் கூறுவதாக அமைகிறது. மூன்றாவது நோக்கம் இசைப்பற்றிய செய்திகளை எடுத்துரைப்பதாக அமைகிறது. இதன் மூலம் முடத்தாமக்கண்ணியார் இசைமீது பற்றுள்ளவராக இருந்திருக்கிறார் என்பதையும் அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், பத்துப்பாட்டு ஆய்வு, ப.5.
2. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப.35.
3. ம. திருமலை, இலக்கிய உலா, ப.145.
4. தெ. பொ.மீ, பத்துப்பாட்டு ஆய்வு, ப.7.
5. பெ.மாதையன், தமிழ்ச் செவ்வியல் இலக்கிங்கள் காலமும் கருத்தும், ப.176.
6. தெ. பொ.மீ, பத்துப்பாட்டு ஆய்வு, ப.7.
7. மா. நவநீதகிருஷ்ணன், தமிழ் இலக்கியத்தில் ஆற்றுப்படை, ப.34.
8. பக்தவத்சலபாரதி, TVU இணையதளம், ஆற்றுபடையின் இலக்கிய படி மலர்ச்சி பாண் மரபை நோக்கிய இனவரைவியல், ப.3.
9. தெ. பொ.மீ, பத்துப்பாட்டு ஆய்வு, ப.8.
10. பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ) மலைபடுகடாம், அடிகள்.550–556
11. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப.53.
12. கா.சுப்ரமணியன், சங்ககாலச் சமுதாயம், ப.86.